01.07.2017

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஒரு ஏக்கரில் திசு வாழை சாகுபடி செலவு ரூ.1 லட்சம்; லாபம் ரூ.5 லட்சம்



மதுரை மாவட்டம் மேலூர் அருகே வேப்படப்பை சேர்ந்தவர் வாழை விவசாயி ஜெகதீஸ்வரன். மேலூர் தோட்டக்கலைத் துறை மூலம் திசு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 'ஜி.9.' ரக வாழையை சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளார்.தோட்டக்கலை உதவி அலுவலர் சண்முகசுந்தரம் கூறியதாவது: - வீரியமிக்க 'ஜி.9' ரகத்தைச் சேர்ந்த வாழை மரத்தில் இருந்து திசு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வாழை கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக கொடுக்கிறோம்.

நோய் தாக்குதல் இருக்காது. வீரியமிக்க வாழை என்பதால் பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. வாழை மரத்தின் துார் பகுதி கனமாக இருப்பதால் மழை, காற்று போன்ற இயற்கை இடர்பாடு பாதிப்புகளில் அதிக பாதிப்பு வராமல் பாதுகாக்கலாம். தோட்டக்கலை வழங்கும் அட்டவணைப்படி இயற்கை உரத்தை திசு ழைக்கு பயன்படுத்தினால் பிற வாழை விவசாயத்தை விட 3 மடங்கு லாபம் சம்பாதிக்கலாம் என்றார்.விவசாயி ஜெகதீஸ்வரன் கூறியதாவது: ஒரே நேரத்தில் வாழை தார்களை அறுவடை செய்ய முடிகிறது. பூவன், ஒட்டு போன்ற பிற ரகங்களை சேர்ந்த வாழைகளில் வாழைத்தாரில் உள்ள காய்களின் எண்ணிக்கையை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால் திசு வாழையில் எடை கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 33 டன் மகசூல் கிடைக்கிறது. ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. லாபம் ஐந்து லட்சம் ரூபாய் கிடைக்கிறது என்றார். தொடர்புக்கு 97510 18008.

- எஸ்.பி.சரவணக்குமார் மேலுார்.

## மண்ணில் புதைத்து பயன்படுத்தும் கால்நடை 'ஊறுகாய் புல்' தீவனம்



மழைக் காலத்தில் பசுந்தீவனம் தட்டுப்பாடு இருக்காது. வறட்சியில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவது பெரும் சவாலாகும். வறட்சியை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் பலர் மாடுகளை விற்று விடுவர். வறட்சியை சமாளிக்கும் வகையில் மூன்று ஆண்டு வரை தட்டுப்பாடு இன்றி கால்நடைகளுக்கு தீவனம் வழங்க வழிகாட்டுகிறார் தேனி மாவட்டம் தப்புக்குண்டு விவசாயி மணிகண்டன். இவர் 40 மாடுகளுடன் பால் பண்ணை நடத்துகிறார். தீவன தட்டுப்பாட்டை சமாளிக்க தேனி உழவர் பயிற்சி மையத்தை நாடினார்.தொழில் நுட்ப ஆலோசனை பெற்று தற்போது 120 டன் கால்நடை தீவனத்தை 'ஊறுகாய் புல்' ஆக தயாரித்து மண்ணில் புதைத்துள்ளார். தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வருகிறார்.உலர வைத்தல்மணிகண்டன் கூறியதாவது: பசுந்தீவனத்தில் ஊறுகாய் புல் (சைலேஜ்) தயாரிக்க முடியும். கோ--4, தீவனச் சோளம், மக்காச் சோளம் ஆகியவற்றில் நீர்ச்சத்து 85 சதவிகிதம் உள்ளது. அதனை வெட்டி நிழலில் 2 மணிநேரம் உலர்த்தி 20 சதவிகித நீர்ச்சத்து வெளியேறி 65 சதவீத நீர் சத்துள்ள நிலையில் புல் வெட்டும் இயந்திரம் மூலம் இரண்டு, மூன்று துண்டாக வெட்டி கொள்ள வேண்டும். 10 அடி அகலம், இரண்டரை அடி ஆழத்தில்

குழி எடுத்து அதில் 'தார்ப்பாய்' விரித்து கொள்ள வேண்டும். தயாரிப்புமுறை 100 கிலோ ஊறுகாய் புல் தயாரிக்க 2 சதவிகித மொலாசஸ் அல்லது இனிப்பு சத்து (கருப்பட்டி), 2 சதவிகித கம்பு மாவு, 0.5 சதவிகித தயிர் ஆகியவற்றை 2 லிட்டர் நீரில் கலந்து கரைசல் தயாரிக்க வேண்டும். பின் வெட்டிய தீவனத்தை குழியில் பரப்பி அதன் மீது கரைசலை தெளிக்க வேண்டும். அடுத்து தீவனத்தை பரப்பி கரைசல் தெளிக்க வேண்டும். தீவனத்தில் உள்ள ஆக்சிஜன் வெளியேறும் வகையில் 'இறுக்கம்' செய்ய வேண்டும். இதேபோல்

தீவனத்தை அடுக்கி நெருக்கமாக செய்து மேலே தார்ப்பாய் கொண்டு காற்றுப்புக முடியாத வகையில் மூடி மேற்பரப்பில் மண்ணால் மூடிவிட வேண்டும். குறைந்தது மூன்று மாதம் திறக்க கூடாது. அதன்பின் குழியை திறந்து தேவைக்கு ஏற்ப பயன்டுத்தலாம்.120 டன் ஊறுகாய்வறட்சியால் விளைச்சல் இன்றி போகும் நிலையில் உள்ள பசுந்தீவனம் 20 ஏக்கர் மொத்தமாக வாங்கினேன். ஒரு குழியில் 15 முதல் 20 டன் என்ற அளவில் 'ஊறுகாய்புல்' தயாரித்து மூடியுள்ளேன். இதுபோன்று 8 குழிகள் உள்ளன. இதில் 120 டன் தீவனம் இருப்பு வைத்து தேவைக்கு ஏற்ப பயன்படுத்துகிறேன். 3 ஆண்டு வரை பயன்படுத்தலாம். இனிப்பு, கம்புமாவு, தயிர் கலவையால் நியூட்டரின் சத்து நிறைந்த ஊறுகாய் புல்லில் 'புரோ பயோடிக்' எனும் நன்மை செய்யும் நுண்ணுயிர் அதிகரித்து விடும். இதனை உண்ணும் கால்நடைகளுக்கு செரிமான கோளாறு வராது. 30 கிலோ பசுந்தீவனம் கொடுக்கும் நியூட்ரின் சத்து அதிகரித்து பால் சுரப்பு கூடும், என்றார். தொடர்புக்கு 99431 37658

-வி.ரவி, திண்டுக்கல்

# இன்றைய வேளாண் செய்திகள்

## நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு: சிறுவாணி அணையில் இருந்து எடுக்கும் தண்ணீர் அளவு அதிகரிப்பு




கோவை நகரின் குடிநீர் ஆதாரமாக விளங்கி வரும் சிறுவாணி அணை கடந்த பிப்ரவரி மாதம் வறண்டது. இதனால் அணையில் இருந்து நீரேற்று குழாய் மூலம் தண்ணீர் எடுப்பது நிறுத்தப்பட்டது. ஆனால் அணையின் மற்றொரு பகுதியில் தண்ணீர் இருந்தது. அந்த தண்ணீரை மோட்டார்கள் மூலம் பம்ப் செய்து அணையின் நீரேற்று குழாய் மூலம் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து கேரள அரசின் அனுமதியின்பேரில் கடந்த பிப்ரவரி மாதம் 20-ந் தேதி முதல் சிறுவாணி அணையில் இருந்து மோட்டார்கள் மூலம் தண்ணீர் பம்ப் செய்து எடுக்கப்பட்டு கோவை நகருக்கு வினியோகம் செய்யப்பட்டது. அதன்படி தினமும் ஒரு

கோடி லிட்டர் முதல் 1½ கோடி லிட்டர் வரை தண்ணீர் எடுக்கப்பட்டது. ஆனால் அந்த தண்ணீர் போதுமானதாக இல்லை.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கியது. இதனால் ஒரே நாளில் 5½ அடி தண்ணீர் உயர்ந்தது. அணைக்கு நீர் வரும் அருவிகளில் தண்ணீர் வரத்தொடங்கியதால் நீர்வரத்து அதிகரித்தது. இதைதொடர்ந்து கடந்த 27-ந் தேதி காலை முதல் மோட்டார் மூலம் பம்ப் செய்வது நிறுத்தப்பட்டு அணையின் நீரேற்று குழாய் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை தண்ணீர் எடுக்க பயன்படுத்தப்பட்டு வந்த மோட்டார்கள் இயக்காமல் அணையின் ஒரு பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்டு உள்ளது. கடந்த 27-ந் தேதி முதல் தினமும் 1½ கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டது. நேற்று முன்தினமும், நேற்றும் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மழை குறைந்தது.

சிறுவாணி அணையில் கடந்த சில நாட்களாக மழை பெய்த போதிலும் மொத்தம் உள்ள 4 நீரேற்று குழாயில் கடைசி குழாய் மட்டும் தண்ணீரில் மூழ்கியது. மற்ற 3 குழாய்களும் வெளியே தெரிகின்றன. அணையின் நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்தால் தான் மற்ற மூன்று நீரேற்று குழாய்களும் தண்ணீரில் மூழ்கும்.

சிறுவாணி அணையில் நேற்று காலை 3 மி.மீட்டரும், அடிவாரத்தில் ஒரு மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. அணையில் இருந்து நேற்று முதல் 2 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் தமிழக நகராட்சி நிர்வாகத்துறை ஆணையாளர் ஹர்மந்த் சிங் நேற்று காலை கோவை வந்தார். அவர் சிறுவாணி அணைக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவருடன் கோவை மாநகராட்சி தனி அதிகாரி விஜயகார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர்

மதியழகன், ஆலோசகர் சம்பத் குமார் உள்பட அதிகாரிகள் பலர் உடன் சென்றிருந்தனர்.

சிறுவாணி அணை பகுதியில் பெய்துள்ள மழை எவ்வளவு?, மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? இருக்கும் தண்ணீரை கொண்டு எத்தனை நாட்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய முடியும்? போன்ற விவரங்களை ஆணையாளர் ஹர்மந்த் சிங் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அதன்பின்னர் அதிகாரிகள் கோவை திரும்பினார்கள்.

## தினமும் ஒரு கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால் கல்லீரல் நோய்கள் வராது



தினமும் ஒரு கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால் கல்லீரல் நோய்கள் வராது